தென்காசி மாவட்டத்தில்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடந்தது



**தென்காசி டிச.09:** தென்காசி மாவட்ட ஆட்சியர்அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர். மக்கள் குறைத் தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்று மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 449 மனுக்கள் பெறப்பட்டது.

பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

பின்னர், தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம் நயினாரகரம் கிராமம், மஜரா காமராஜர்புரம் - திருமங்கலம் - கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் (24.11.2025) அன்று நடந்த சாலை விபத்தில் லேசான காயம் அடைந்த மாரியம்மாள், சுப்பிரமணியம் ஆகிய இரண்டு நபர்களுக்கு தலா ரூ.50,000 வீதம் மொத்தம் ரூ.1.00,000 மதிப்பிலான முதலமைச்சரின் பொது நிவாரண நிதியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், வழங்கினார்.

இக்கூட்டத்தில்,மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் (ச,பா.தி) நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடியில்

# பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: 378 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது



**திருச்செந்தூர் டிச 9** தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தலைமையில் திங்கள்கிழமை மக்கள் குறை களையும் நாள் கூட்டம் நடைபெற்றது.

பொதுமக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல் உத்தரவு, வரன்முறைப்படுத்தி பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு வேண்டி, தொழில் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 378 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு துறைசார்ந்த அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.முன்னதாக, மாற் றுத் தி ற னா ளி களை நேரில் சந்தித்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 22 கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்தார்.இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சேதுராமலிங்கம், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சாந்தி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் பிரம்மநாயகம், துணை காவல் கண்காணிப்பாளர் (பயிற்சி) சுரேஷ் மற்றும் அனைத்துத் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**என் வாக்கு சாவடி வெற்றி வாக்கு சாவடி தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் காணொளி வாயிலாக நடைபெறும் மாவட்ட திமுக செயலாளர்கள் கூட்டத்தில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன், தொகுதிபார்வையாளர்,தலைமைசெயற்குழுஉறுப்பினர்கள், ஒன்றிய,நகர,பேரூர்செயலாளர்களுடன்கலந்துகொண்டார்.**



**தென்காசி மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதியை மாவட்ட திமுக பொறுப்பாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில் செங்கோட்டை நகர திமுக செயலாளர் வழக்கறிஞர் ஆ.வெங்கடேசன் பொன்னாடை வழங்கி வரவேற்றார்.**

சங்கரன்கோவிலில்

# வடக்கு மாவட்ட திமுக சார்பில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு வழங்கப்படும் கேக்குகள் தயாரிக்கும் பணி

## ராஜா எம்எல்ஏ துவக்கி வைத்தார்



**சங்கரன்கோவில். டிச.9.** கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு சங்கரன் கோவில் தொகுதியில் சங்கரன்கோவில் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம் , சங்கரன் கோவில் நகரம் ஆகிய பகுதிகளில் உள்ள 200 க்கும் மேற்பட்ட தேவாலயங்களில் கிறிஸ்துமஸ் பண்டிகையை சிறப்பிக்கும் வகையில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ஏற்பாட்டில் கடந்த 4 ஆண்டுகளாக அந்தந்த பகுதிகளுக்கு தனித்தனியாக பொறுப்பாளர்களை நியமித்து அனைத்து தேவாலயங்களுக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களுடன் 80,000 கேக்குகள் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இந்த ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி தேவாலயங்களுக்கு வழங்க கேக்குகள் தயாரிக்கும் பணி தொடங்கியது. இந்த பணிகளை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ துவக்கி வைத்தார். இந்த நிகழ்வின் போது நகர செயலாளர் பிரகாஷ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வீரமணி, நகர இளைஞரணி ஜான்சன், சுற்றுசூழல் அணி தாஸ், ஓய்வு பெற்ற தாசில்தார் சூரியநாராயணமூர்த்தி, ஜெயக்குமார், பாலாஜி, மாரியப்பன், பாரதி, கார்த்தி உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

கோவில்பட்டி நாடார் மேல்நிலைப்பள்ளியில்

# பள்ளி கல்வித்துறை சார்பில் 327 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா

## கடம்பூர் ராஜூ எம்.எல்.ஏ. பங்கேற்பு



**கோவில்பட்டி டிச 09** கோவில்பட்டி நாடார் மேல்நிலைப் பள்ளியில் தமிழக அரசின் பள்ளி கல்வித் துறை சார்பில் நிலையில்லா மிதிவண்டி 327 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

நாடார் உறவின் முறை சங்க துணைதலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். சங்க பொருளாளர் சுரேஷ்குமார், பத்ரகாளியம்மன் கோவில் தர்மகர்த்தா மாரியப்பன் , நாடார் மேல்நிலைப் பள்ளி செயலாளர் வழக்கறிஞர் ஜெ. ரத்தின ராஜா, பள்ளி பொருளாளர் விஜயகுமார், நிர்வாக குழு உறுப்பினர்கள் சாமி ராஜன், வேல்முருகன், ரவிச்சந்திரன், வெங்கடேஷ், ஆகியோர் முன்னிலை வைத்தனர். கோவில்பட்டி கல்வி மாவட்ட அலுவலர் மரிய ஜான் ஜான்பிரிட்டோ, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை சமூக நல பிரிவு அலுவலர் செந்தில் வேல்முருகன், ஆகியோர் சிறப்புரையாற்றினார். பள்ளி தலைமை ஆசிரியர் பெ. அருணாசலம் வரவேற்புரை ஆற்றினார். பள்ளி உதவி தலைமை ஆசிரியர் கு. செல்வம் நன்றி உரையாற்றினார். ஏராளமான ஆசிரியர் பெருமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கடம்பூர் ராஜூ எம் எல் ஏ, பொதுக் குழு உறுப்பினர் இராமச்சந்திரன், நகர செயலாளர் விஜய பாண்டியன், இளைஞர் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் எம் ஆர்வி கவியரசன், மகளிரணி மாவட்ட செயலாளர் பத்மாவதி, கனகசுந்தரம் வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலாளர் ஜி. எம்.சங்கர்கணேஷ், ஒன்றிய செயலாளர்கள் பழனிச்சாமி, அன்புராஜ், அழகர்சாமி, போடு சாமி, மாவட்ட அம்மா பேரவை துணைச் செயலாளர் துறையூர் கணேஷ் பாண்டியன், அம்மா பேரவை நகர செயலாளர் ஆபிரகாம் அய்யாதுரை மாவட்ட மாணவரணி துணைச் செயலாளர் பொறியாளர் தாஸ் அய்யனூர ராஜ், அத்தை கொண்டான் செல்வக் குமார், உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்..

கோவில்பட்டியில்

# ஜெயலலிதா நினைவு தினம்




**கோவில்பட்டி டிச 09-** கோவில்பட்டி அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் ஜெயலலிதா ஒன்பதாம் ஆண்டு நினைவு தினம் கொண்டாடப்பட்டது அதனைத் தொடர்ந்து சுமார் 500 பேருக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் ஆணைக்கிணங்க துணைப் பொதுச்செயலாளர் எஸ் வி எஸ் பி மாணிக்கராஜா அறிவுறுத்தலின்படி தூத்துக்குடி புறநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் வி பூலோக பாண்டியன் வேண்டுதலின்படி கோவில்பட்டி பெருநகர கழகச் செயலாளர் என் எல் எஸ் செல்வம் தலைமையில் நகர கழகத்தின் சார்பாக நடைபெற்றது . மாவட்ட கழக அவைத் தலைவர் எஸ் கே அமிர்தராஜ் பாண்டியன் மாவட்ட கழக துணைச் செயலாளர் கிழவி பட்டி கே எம் வி. குமார் பாண்டியன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி செயலாளர் சாமி. செண்பகராமன் நகர கழக துணைச் செயலாளர் சிவக்குமார் பாண்டியன் நகர கழக இணைச் செயலாளர் பாலசுப்பிரமணியன் நகர கழக பொருளாளர் கார்த்திக் மூணாவது வார்டு கழகச் செயலாளர் முத்து கருப்பசாமி மற்றும் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் 71-வது நிறுவனர் தினவிழா



**தென்காசி டிச.09:** அருள்மிகு செந்திலாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் 71வது கல்லூரி நிறுவனர் தினவிழா கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி தலைவர் டாக்டர் புதிய பாஸ்கர் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் டாக்டர் சேவியர் இருதயராஜ் வரவேற்புரையாற்றினார். சிறப்பு விருந்தினராக தென்காசி பசி இல்லா தமிழகம் நிறுவனர் முகமது அலி ஜின்னா, தென்காசி லைப் இன்ஸ்டாகிராம் பிரபலங்கள், தமிழக அறிவியல் இயக்க மாவட்ட தலைவர் சுரேஷ்குமார், இந்திய அஞ்சல் துறை சார்ந்த டாக்டர் ஜெகதீசன், ரத்னா பள்ளி முதல்வர் சாரதி, அறம் செய்ய விரும்பு இயக்கம் நிறுவனர் கார்த்திக் ஆகியோர் தலைமை தாங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக தென்காசி அரசு மருத்துவமனை டாக்டர் பாபு மற்றும் குழுவினர் தலைமையில் இரத்ததான முகாம் நடைபெற்றது. கல்லூரி நாட்டு நலப்பணி திட்டம் சார்பாக மரக்கன்று நடுதல், அதனைத் தொடர்ந்து அல் மகா டிரஸ்ட் நிறுவனர் ஹைதர் அலி, தமிழ்நாடு பிளக்ஸ் பேனர் அசோஸியேஷன் சார்பாக முகமது அப்துல் ரகுமான் மற்றும் கல்லூரி சார்பாக 10 லட்சம் மதிப்புள்ள கல்வி ஊக்கத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதே போல் கல்லூரியில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் விபத்து காப்பீடு திட்டமும் அவர்ள் குழந்தைகளுக்கு கல்வி ஊக்கத் தொகை வழங்கும் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அறம் செய்ய விரும்பு அறக்கட்டளை சார்பாக மூன்று முதியோர் இல்லங்களுக்கு மதிய உணவு அளிக்கப்பட்டது.

சிவசைலம், அமர்சேவா சங்கம் போன்ற முதியோர் இல்லங்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. அதேபோல் கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் கல்லூரியின் தலைவர் வழிகாட்டுதலின் படி மதிய உணவு விருந்து வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாலை மாணவர்களுக்கு விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் கல்லூரியின் தலைவர் வழிகாட்டுதலின் படி அனைத்து ஆசிரியர்களும் செய்திருந்தனர்.

# எஸ்.ஆர்.பள்ளியில் கராத்தே திறனாய்வுத் தேர்வு



**சுரண்டை டிச.09:** சுரண்டை எஸ் ஆர் ஸ்கூல் ஆப் எக்ஸலன்ஸ் பள்ளியில் டிரடீஷனல் இசின்ரியு கராத்தே மற்றும் குபுடோ கழகம் சார்பில் கராத்தே திறனாய்வுத் தேர்வு நடைபெற்றது.

இதில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான 30 மாணவர்கள் பங்கேற்றனர். கராத்தே தாக்குதல் மற்றும் தடுத்தல், கட்டா, குமுதே உள்ளிட்டவைகளை மாணவர்கள் செய்து காட்டினர். கராத்தே திறனாய்வுத் தேர்வில் பங்கு பெற்ற மாணவர்களை தேர்வாளர்கள் சக்திவேல் மற்றும் ரூபன் ஆகியோர் தேர்வு செய்தனர்.

தேர்வு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் மஞ்சள் வண்ணப் பட்டை, இளஞ்சிவப்பு வண்ணப் பட்டை, பச்சை வண்ணப் பட்டை ஆகியவை வழங்கப்பட்டன.

கராத்தே திறனாய்வுத் தேர்வில் சாதனை படைத்த மாணவர்களை குழல்வாய் மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவனர் சிவ பபிஸ் ராம், பள்ளியின் செயலர் சிவ டிப்ஜினிஸ் ராம், முதல்வர்கள் பொன் மனோன்யா மற்றும் புஷ்பா, தலைமை ஆசிரியர் மாா ிக்கனி ஆகியோர் பாராட்டினர்.

கராத்தே பயிற்சியாளர் மாரிமுத்து மாணவர்களை ஒருங்கிணைத்தார்



**தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு வருகை தந்த திமுகஅமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதியை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தலைமையில் தென்காசி நகரமன்ற தலைவரும் திமுக நகர செயலாளருமான ஆர்.சாதிர் சிறப்பான வரவேற்பு அளித்தார் .**

# ஹில்டன் மெட்ரிக் பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா

குற்றாலம் டிச.09: தென்காசி மாவட்டம் பழைய குற்றாலம் ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் கிறிஸ்துமஸ் விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக Rev. சார்லஸ், சகாயமேரி சார்லஸ், ஹில்டன் பள்ளியின் தாளாளர் ஆர். ஜெ.வி.பெல்;, பள்ளியின் செயலாளர் கிரேஸ் கஸ்தூரி பெல,; பள்ளியின் முதல்வர் மான்சி கே மத்தாய், தலைமையாசிரியர், ஆசிரியர்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

இறைவணக்கத்துடன் தொடங்கப்பட்ட விழாவில் பள்ளியின் மாணவத் தலைவி ஜேன் கிறிஸிடா வரவேற்புரை வழங்கினார். பள்ளியின் தாளாளர் விருந்தினரை அறிமுகம் செய்து வைக்க சிறப்பு விருந்தினர் Rev. சார்லஸ் மாணவர்களுக்கு கிறிஸ்துவின் பிறப்பு குறித்து செய்தியை வழங்கினார். தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் கண்ணிற்கு விருந்தாய் அமைந்;தது. நடனம் மாணவர்களின் குறுநாடகம் அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது பள்ளியின் முதல்வர் மோன்சி கே மத்தாய் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவுற்றது.

**நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை**



**நாகர்கோவில் மாநகராட்சி 24-வது வார்டுக்குட்பட்ட நாகராஜா கோவில் மேற்குரதவீதியில் உள்ள தெருவில் 2.70 லட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியை மேயர் ரெ.மகேஷ் தொடங்கி வைத்தார்.உடன் மாமன்ற உறுப்பினர் ரோசிட்டா, பகுதி செயலாளர்கள்துரை.சேக்மீரான்,மாநகரஅவைத்தலைவர்பன்னீர்செல்வம்மற்றும்நிர்வாகிகள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.**

